முருகப்பெருமான் துணை

**மகான் வசிஸ்டமகரிஷி அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**14.04.2024,** ஞாயிற்றுக்கிழமை

1. ஆறுமுகனார் அவதாரமாக வந்த
அண்ணலே அரங்க மகானே
மாறுதலை உலகினில் புரிய வந்த
மாதவசியே ஞான தேசிகனே
2. தேசிகனே உன்பெருமை கூறி
தெரிவிப்பேன் துல்லிய ஆசி
ஆசிதனை குரோதி தகர் திங்கள்
அச்சமற ஏக திகதி கதிர் வாரம்
(குரோதி வருடம் சித்திரை மாதம் முதல் நாள், 14.04.2024, ஞாயிற்றுக்கிழமை)
3. வாரமதில் வசிஸ்டமகரிஷி யானும்
வழங்குவேன் உலகநலம் பெற
சோரமில்லா ஞான வழி காட்டும்
சுத்தநெறி கொண்ட அரங்கன்
4. அரங்கன் தலைமை ஏற்று
அகிலத்தார் ஞானம் பயின்றுவர
வரங்கள் தரும் தீட்சை முறைகள்
வள்ள்ல அரங்கன் கரங்கள்பட ஏற்று
5. ஏற்றுமே மக்களெல்லாம் தொடர
எல்லா வகையிலும் ஞானபலம்
ஆற்றலாகப் பெருகி இனிதே
அனைவரும் ஞானிகள் ஆவர்
6. ஆவரே கலிகால இன்னல்களை
அகற்றும் மகா சக்திகளாக
அவனியில் அவரவரும் தேறி
அற்புதமான ஞானயுகமாற்றம்
7. மாற்றம்தனை நடத்தி இனிதே
மனிதர்கள் ஆட்சி தனை
மாற்றம் செய்து உலகினில்
மகத்துவம் பல படைப்பர்

8. படைக்கவே இந்தவித மாற்றங்கள்
பாருலகம் அடைய வேண்டி
படைகளாக அரங்கன் உருவாக்கும்
பண்பான ஞானவான்கள் படை

9. படைகள எல்லாம் உலகமெங்கும்
பழுதின்றி பெருகிவர சடுதி
தடையின்றி உலக மாற்றம்
தவராஜனால் மட்டுமே நிகழும்

10. நிகழவே முருகப் பெருமானே
நிலவுலகை வழிநடத்தும் விதமாக
மகான் அரங்கன் சூட்சுமமாக
மண்ணுலகில் செயல்பாடுபுரிய

11. புரியவே அரங்கன் வழிதேடிவந்து
பூவுலக மக்களெல்லாம் சேர
தெரியவரும் பேருலகமாற்றம்
தேசிகனார் அவதார நோக்கமாக

துல்லிய ஆசி முற்றே

—சுபம்—